

ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட செங்குந்தர் கல்யாண மண்டபத்தில் மாற்றுதிறனாளிகள் துறை சார்பில் மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனங்களை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வி.செல்வராஜ் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



ஈரோடு வடக்கு மாவட்ட தி.மு.க அந்தியூர் சட்டமன்றத் தொகுதி மாவட்ட இளைஞர் அணி சார்பில் இந்தித் திணிப்பு, நிதி பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறு சீரமைப்பில் அநீதி செய்யும் ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் குளத்துகடையூர், கூகலூர் பகுதியில் மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் தலைமையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் திருவேங்கடம் ஏற்பாட்டில் தலைமை கழக பேச்சாளர்கள் தி.செந்தில்வேல், ஏ.ஜி.வெங்கடாசலம் எம்.எல்.ஏ., செ.நந்தகோபால், சி.காசி, சிவசீனிவாசன் ஆகியோர் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார்கள். கூட்டத்தில் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

### திருவாலங்காடு வடாரண்யேஸ்வரசுவாமி

# திருக்கோயிலுக்கு பூஜை மண்டபம் ஏற்படுத்தித் தரப்படும்!

## சட்டப்பேரவையில் - கழக உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் பி.கே.சேகர்பாபு பதில்!

*சென்னை, மார்ச் 19-*

சட்டப்பேரவையில் திருவள்ளூர் தொகுதி கழக உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் பி.கே.சேகர்பாபு, திருவாலங்காடு வடாரண்யேஸ்வர சுவாமி திருக்கோயிலிருக்கு பரிகார பூஜை மண்டபம் ஏற்படுத்தி தரப்படும் என தெரிவித்தார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நேற்று முன்தினம் (17.3.2025) வினா விடை நேரத்தின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள், திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன், போடிநாயக்கனூர் சட்டமன்ற உறுப்பினர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் எழுப்பிய வினாக்களுக்கு பதிலளித்தார்.

**வி.ஜி.இராஜேந்திரன் :** திருவாலங்காடு, வடாரண்யேஸ்வரசுவாமி திருக்கோயிலுக்கு திருமண மண்டபம் கட்ட அரசு முன்வருமா?

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** திருவாலங்காடு, வடாரண்யேஸ்வரசுவாமி திருக்கோயில் என்பது பஞ்ச சபைகளில் ஒன்றான ரத்ன சபை என்று அழைக்கப்படுகின்ற திருக்கோயிலாகும். காரைக்கால் அம்மையார் இல்லற வாழ்வை துறந்து துறவியாக முக்தி பெற்ற திருக்கோயில் என்பதால் ஐதீகப்படி திருமணம் போன்ற சுப காரியங்கள் இந்த திருக்கோயிலை மையப்படுத்தி நடத்துவதில்லை. ஆகவே சுப நிகழ்ச்சிகள் நடத்திடாத சூழ்நிலையில் திருமண மண்டபம் அங்கு கட்ட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**வி.ஜி.இராஜேந்திரன் :** முதல்வர் அவர்களை வணங்கி என்னுடைய திருவள்ளூர் தொகுதியிலேயே இருக்கின்ற திருவாலங்காடு, வடாரண்யேஸ்வரசுவாமி திருக்கோயில் எத்தகைய சிறப்பு வாய்ந்தது என்பதை பற்றி அமைச்சர் நன்றாக விவரித்தார். பஞ்ச சபைகளில் ஒன்றான ரத்தின சபை திருக்கோயில் மாந்திரீக பூஜை நடத்துவதற்கு உண்டான இடம். தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய மக்கள் சனிக்கிழமை வந்து பூஜை நடத்துகிறார்கள். அதற்கு கோயிலில் சிறிய இடம்தான் இருக்கிறது. சிவராத்திரி, ஆருத்ரா தரிசனம், பிரதோஷம் போன்ற நாட்களில் இங்கு வரக்கூடிய பக்தர்கள் தங்கக்கூடிய அளவிற்கு தங்கும் வசதி ஏற்படுத்தி தரும் வகையில் விடுதி ஒன்று அமைத்திட வேண்டும்.




அதனை முதல்வர் அனுமதி பெற்று அமைச்சர் ஆலோசித்து செய்வார் என நம்புகிறேன். அதுமட்டுமில்லாமல் அந்த கோயிலுக்கு போகின்ற வழியில் NH205ல் திரு ப்பாச்சூர் சிவன் கோயில் இருக்கிறது. அங்குள்ள குளத்தினை முதலமைச்சர் எதிர்க்கட்சி தலைவராக இருந்தபோது சீரமைத்து தண்ணீர் நிரப்பிட அடிக்கல் நாட்டி பணிகளை செய்தோம். திருப்பதிக்கு செல்கின்ற வழியாக உள்ளதால் அந்த பகுதியில் கழிப்பிட வசதி மற்றும் மண்டபம் அமைத்து தர வேண்டும் என கேட்டு அமைகிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** பேரவை தலைவர் அவர்களே, அவரது கேள்வி என்பது திருமண மண்டபம் என்று இருந்ததால் அதற்கான பதிலை நான் சொன்னேன். உறுப்பினர் தற்போது மற்ற காரியங்கள் செய்வதற்காக மண்டபம் வேண்டுமென கேட்டிருக்கின்றார். உடனடியாக துறை அலுவலர்களை அனுப்பி ஆய்வு செய்து வாய்ப்பு இருந்தால் நிச்சயம் ஏற்படுத்தி தரப்படும்.

மகாசிவராத்திரி விழா என்பது கடந்த காலங்களில் இந்து சமய அறநிலையத் துறை சார்பில் நடத்தப்படாத நிலையில் வரலாற்றை மாற்றி அமைத்து 9 திருக்கோயில்கள் சார்பில் மகாசிவராத்திரி விழா நடத்திய பெருமை திராவிட மாடல் ஆட்சியையே சேரும். அந்த திருக்கோயில்களில் ஒன்றான திருவாலங்காடு, வடாரண்யேஸ்வரசுவாமி திருக்கோயிலில் இந்தாண்டு மகாசிவராத்திரி விழா சிறப்பாக நடத்தப்பட்டது. அதேபோல் முக்தி பெற்ற காரைக்கால் அம்மையாருக்கு சிறப்பு விழா நடத்துவதற்கு ஏற்கனவே சட்டமன்ற அறிவிப்பு செய்திருந்தோம். அந்த விழாவும் இந்த மாதம் நடைபெறுகிறது. திருப்பா ச்சூர் திருக்கோயில் குளமானது பஞ்சாயத்திற்கு சொந்தமான குளமாகும். ஆகவே நீங்கள் உள்ளாட்சி அமைப்பின் மூலம் அந்த குளத்தை மேம்படுத்திக் கொள்ளலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**வி.ஜி.இராஜேந்திரன்:** அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. அவர் தங்கும் விடுதி கட்டித் தரப்படுமா என்பதை சொல்லவில்லை.



நிச்சயமா இந்த பட்ஜெட்டில் அறிவிப்பார் என்று நம்புகிறேன். கடம்பத்தூர் ஒன்றியம் நரசிங்கபுரம் ஊராட்சியில் லட்சுமி நரசிம்மர் திருக்கோயில் இருக்கிறது. அதற்கு உபயதாரர்கள் முன்வந்து பணிகளை செய்கிறேன் என்று ஒப்புக் கொண்டுள்ளனர். எட்டு மாதமாக பணிகள் நடைபெறவில்லை. அதனை மாற்றி வேறு உபயதாரர்கள் மூலமாகவோ, அல்லது அரசே ஏற்று அந்த பணிகள் நடைபெறுமா என்பதனையும், மாதம் தோறும் சுவாதி நட்சத்திரத்தன்று பல்லாயிரக்கணக்கான மக்கள் வருகைதரும் அந்த திருக்கோயிலுக்கு சொந்தமான குளத்தை சீர் செய்து அங்கு சுற்றுச்சுவர் மற்றும் கழிப்பிடங்கள் கட்டித் தரப்படுமா என்பதைக் கேட்டு அமைகிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** பேரவை தலைவர் அவர்களே, உறுப்பினர் கூறிய லட்சுமி நரசிம்மர் திருக்கோயிலில் 25 லட்ச ரூபாய் செலவில் உபயதாரர் பணியை மேற்கொண்டு இருந்தார். உடல்நிலை சரியில்லாததால் இடையில் அந்த பணி தடை ஏற்பட்டது உண்மை தான். தற்போது அந்த பணி விரைவு படு த்தப்பட்டு 80 சதவீத பணி நிறைவடைந்து இருக்கின்றது. இரண்டு மாதத்திற்குள்ளாக குடமுழுக்கை நிச்சயம் நிறைவேற்றி தருவோம். அதே வேளையில் திருக்குளத்தை சீரமைக்க மண்டல குழுவின் ஒப்புதல் பெறப்பட்டு, மாநில வல்லுநர் குழு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு இருக்கின்றது. வெகுவிரைவில் ஒப்பந்தம் கோரப்பட்டு அந்த குளம் சீரமைத்து தரப்படும்.

உறுப்பினர் கோரிய திருமண மண்டபமானது ஐதீக முறைப்படி அங்கே கட்ட முடியாத நிலை உள்ளதை தான் சொன்னேன். கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும் என்ற வாசகத்திற்கு பொருத்தமான இந்த ஆட்சியில் அவர் கோரிய மண்டபத்திற்கான பணிகளை மேற்கொள்வதற்கு உண்டான அனைத்து முயற்சிகளையும் துறை மேற்கொள்ளும். தமிழ்நாடு முதல்வர் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு இது வரை 85 திருக்கோயில்களுக்கு சுமார் 347 கோடி ரூபாய் செலவில் திருமண மண்டபங்கள் கட்டப்படுகின்றன. இந்து சமய அறநிலையத்துறை வரலாற்றில் இல்லாத அளவிற்கு திருமண மண்டபங்களை அதிகளவு கட்டித் தருகின்ற ஆட்சியாக இந்த ஆட்சி திகழ்ந்து கொண்டிருக்கின்றது. இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 4.20 கோடி ரூபாய் செலவில் நான்கு புதிய திருக்குள ங்கள் உருவாக்கப்பட்டு வருவதோடு, ரூ.120 கோடி மதிப்பீட்டில் 220 திருக்குளங்கள் புனர மைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. 200 ஆண்டுகளை கடந்தும் தெப்பத் திருவிழாக்கள் நடைபெறாமல் இருந்த நாமக்கல் போன்ற திருக்கோயில்களில் தெப்ப திருவிழா நடந்தப்பட்டதன் காரணமாக இறையன்பர்கள், அந்தந்த பகுதியை சேர்ந்த மக்கள் அரசுக்கும், தமிழக முதல்வரு க்கும் நன்றி தெரிவித்தனர். அந்த வகையில் உறுப்பினர் கூறிய கோரிக்கை முதல்வர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று வாய்ப்பிருப்பின் நிச்சயம் நிறைவேற்றி தரப்படும் என்று உறுதியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஓ.பன்னீர்செல்வம் :** உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் அவருடைய கேள்விக்கு பதில் பெற அமைச்சர் அவர்களும் சில விளக்கங்களை கேட்டார். அவர் கேள்வி கேட்கின்ற போது மாந்திரீக பூஜை பற்றி சொன்னார். மாந்திரீக பூஜை என்றால் என்ன என்று என்பதற்கு அமைச்சர் தக்க விளக்கத்தை அளிப்பாரா என்பதை கேட்க விரும்புகிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** அவரும் ஆன்மீகவாதி. நீண்ட நெடிய படிக்கட்டுகளில் பல திருக்கோயில்களில் அவரது எண்ணங்களை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக சுற்றி சுற்றி வருபவர். அவருக்கு தெரியாதது ஒன்றும் அல்ல. மாந்திரீகம் என்ற ஒரு வார்த்தை இந்த ஆட்சியில் திராவிட மாடல் ஆட்சியில் எங்கும் நடைபெறுவதில்லை. பரிகார பூஜையை தான் அவர் மாந்திரீக பூஜை என்று மாற்றி சொல்லிவிட்டார். பரிகார பூஜை மண்டபம் தான் கேட்டார். அந்த பரிகார பூஜை மண்டபம் ஏற்படுத்தி தரப்படும் என்பது முன்னாள் முதல்வர், சட்டப் பேரவை உறுப்பினர், பன்னீர்செல்வம் அவர்களுக்கும் உறுப்பினர் ராஜேந்திரன் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### தென்னிந்தியாவை பற்றி கவலைப்படாமல் வட இந்தியாவில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கலாம் என

# தொகுதி மறு சீரமைப்பு திட்டத்தை ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டுவர முயற்சிக்கிறது!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் குற்றச்சாட்டு !

*அரியலூர், மார்ச் 19-*

அரியலூர் மாவட்டம் கீழகாவட்டாங்குறிச்சியில் தமிழ்நாடு முதலமைச்சரின் 72 ஆவது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தி.மு.க. மாவட்டச் செயலாளரும் போக்குவரத்து துறை அமைச்சருமான சிவசங்கர் கலந்துகொண்டு சிறப்புரை யாற்றினார்.

அப்பொழுது இன்றைக்கு தமிழ்நாடு கல்வியிலே மேலே மேலே வந்து கொண்டிருப்பதை பார்க்கிறோம் கலைஞர் கொண்டு வந்த பெண் குழந்தைகள் படித்தால் உதவி தொகை தற்போதைய முதலமைச்சர் கொண்டுவந்த அரசு பள்ளியில் பயின்று கல்லூரியில் சேரும் பெண் குழந்தைகளுக்கு புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் மாதம் ஆயிரம் ரூபாய் என திமுக அரசின் திட்டங்களால் 50% ஆக இருந்த கல்லூரியில் படிக்கும் பெண் குழந்தைகள் தற்போது 80 சதவீத பெண் குழந்தைகள் கல்லூரியில் பயின்று வருகின்றனர் இன்னும் 5 வருடத்தில் தமிழ் நாட்டிலே எல்லா பெண் குழந்தைகளும் 12 ஆம் வகுப்பு முடித்தால் கல்லூரி முடித்தவர்களாக இருப்பார்கள்.



இது இந்தியாவில் எந்த மாநிலத்திலும் கிடையாது கல்வி அறிவு வந்துவிட்டால் அவர்கள் எந்த தொழில் செய்தாலும் முன்னேற்ற மடைவார்கள் என்பதற்காக தான் நமது முதலமைச்சர் படிப்பை கொடுக்கிறார்.

ஆனால் வட இந்தியாவில் படிக்க வேண்டாம் படிப்பதற்கு கொடுக்கப்பட்ட பணத்தை வைத்து கோயிலை கட்டுகிறேன் என கோடி கோடியாக செலவு செய்து கோயிலை கட்டுகிறார்கள் ஏழை மக்களின் வரிப்பணத்தை வாங்கி மக்களுக்கு கொடுக்காமல் கோயிலை கட்டுகிறார்கள் ஜிஎஸ்டி உள்ளிட்ட பல்வேறு வரிகள் மூலம் மத்திய அரசு நமது பணத்தை கொள்ளை அடித்து வட மாநிலங்களில் கொடுக்கிறார்கள் அதற்கு என்ன காரணம் என்றால் வடமாநிலங்களில் உள்ள எம்பி தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும் ஆந்திரா தமிழ்நாடு கேரளா கர்நாடகம் பற்றி கவலைப்பட வேண்டாம் அவங்க யாருக்காவது ஓட்டு போடட்டும் வடமாநிலங்களில் நம்ம ஜெயித்து வந்து ஆட்சி நடத்தலாம் என்பதற்காக தான் தொகுதி மறுசீரமைப்பு என்ற திட்டத்தை கொண்டுவர பார்க்கிறார்கள் அதையும் நமது முதலமைச்சர் எதிர்க்கிறார் இன்னொரு முக்கியமானது இந்தி திணிப்பு. இந்தி திணிப்பதை முதன் முதலில் எதிர்த்த மாநிலம் தமிழ்நாடு தான் காரணம் இந்தி வந்தால் தமிழ் அழியும் எனது தாய்மொழி அழியும் எனது தாய் மொழியை விட்டு உன்னை காப்பாற்ற வேண்டிய அவசியம் இல்லை என இந்தி திணிப்பிற்கு எதிராக போராடுகிறோம்.

நமது மீது இந்தியை திணித்தால் நம் மீது இந்திய திணித்தாள் நாளைக்கு மத்திய அரசாங்கம் நடத்துகின்ற தேர்வுகள் எல்லாம் இந்தியில் நடத்துவார்கள், தாய் மொழியை இந்தியை கொண்டவன் அதிக மார்க்கு வாங்குவானா மூன்றாவது மொழியாக இந்தியை படிக்கும் நம்ம வாங்குவோமா நம்மால் வாங்க முடியாது இந்தியை தாய்மொழியாகக் கொண்டவன் அதிக மார்க் வாங்குவார்கள் அவர்கள் தான் வேலைக்கு வருவதற்கான வாய்ப்பு ஏற்படும் இது தான் அவர்களது திட்டம் இதனை கருத்தில் கொண்டு தான் பேரறிஞர் அண்ணா கொண்டு வந்தார் நாங்க தமிழையும் ஆங்கிலத்தையும் படித்துக் கொள்கிறோம் என்று.

அதனால்தான் நமது மாநிலத்தில் பல கிராமங்களில் உள்ள மாணவர்கள் வெளி நாடுகளில் போய் வேலை பார்க்கிறார்கள் என்றால் அது அண்ணா கொண்டு வந்த இருமொழி திட்டத்தால் தான். அதனால்தான் அந்த வழியில் நமது முதலமைச்சர் மிகத் தெளிவாக ஆனித்தரமாக வாதிட்டு ஒன்றிய அரசாங்கத்தை எதிர்த்து வருகிறார் இந்தியாவில் பல முதலமைச்சர்கள் உள்ளார்கள் மோடியை எதிர்த்து தைரியமாக பேசக்கூடிய முதல் முதலமைச்சர் நமது முதலமைச்சர் தான் அவரால் தான் தமிழ்நாட்டை காப்பாற்ற முடியும் தமிழ் நாட்டை காப்பதற்கு நமது முதலமைச்சருக்கு பின்னால் நாம் அணிவகுப்பதற்கான அவசியம் உள்ளது என

அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசினார்.

### முத்தமிழறிஞர் கலைஞருக்கு

# புதுவையில் மரியாதை அளிக்கும் வகையில் பெயர் சூட்டப்படும்!

## சட்டப்பேரவையில் முதல்வர் ரங்கசாமி அறிவிப்பு!

*புதுச்சேரி, மார்ச் 19-*

புதுவை சட்டசபையில் கேள்வி நேரத்தின்போது நடந்த விவாதம் வருமாறு:-

**கென்னடி (தி.மு.க.):** அரசு வாக்குறுதி அளித்தபடி மறைந்த தமிழக முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்க அரசு சார்பில் ஏதேனும் குழு அமைக்கப் பட்டுள்ளதா? இடம் தேர்வு செய்யப்பட்டதா? இல்லையெனில் ஏன்?

**அமைச்சர் திருமுருகன்:** எந்த குழுவும் இதுவரை அரசால் அமைக்கப்படவில்லை.

**கென்னடி:** புதுவை தனி மாநிலமாக உருவாக குரல் கொடுத்தவர் எங்கள் தலைவர். அவருக்கு சிலை அமைக்க ஏன் காலதாமதம்? கிழக்கு கடற்கரை சாலையில் வரும் புதிய பஸ்நிலையத்துக்கு வாஜ்பாய் பெயர் சூட்டப்படும் என அறிவித்துள்ளீர்கள். மனசாட்சியோடு செயல்படுங்கள்.

**எதிர்கட்சித்தலைவர் சிவா:** எந்த குழுவும் அமைக்கப்படவில்லை என கூறலாமா? இது தவறான தகவல். இடம் கூட தேர்வு செய்தோம்.

**நேரு (சுயே):** மறைந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கும் புதுவையில் சிலை அமைக்க வேண்டும்.

**எதிர்க்கட்சித் தலைவர் சிவா:** யாருடைய சிலையை வைக்கவும், நாங்கள் எதிராக இல்லை. சிலை வைப்பது தொடர்பாக 5 முறை பதில் கூறிவிட்டீர்கள். ஆனால் சிலை அமைக்கவில்லை. இதில் பெருந்தன்மையோடு நடந்துகொள்ளுங்கள்.

**முதலமைச்சர் ரங்கசாமி:** சிலை வைக்கக்கூடாது என்ற எண்ணம் அரசுக்கு இல்லை. தமிழுக்காகவும், தமிழர்களுக்காகவும் பாடுபட்ட, போற்றப்படும் தலைவர்களுக்கு சிலை அமைப்பதில் மாற்று கருத்தும் இல்லை. ஆனால் சுப்ரீம்கோர்ட் ஒரு உத்தரவு பிறப்பித்துள்ளது. இதனால் மறைந்த தமிழக முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு மரியாதையும், மதிப்பும் அளிக்கும் வகையில் ஏதாவது ஒரு இடத்திற்கு பெயர் சூட்டப்படும் என்றார். இவ்வாறு விவாதம் நடந்தது.



திருப்பூர், வேலம்பாளையத்தில் அமைந்துள்ள வடக்கு மாவட்ட, மாநகர கழக அலுவலகத்தில் வடக்கு மாநகரப் பொறுப்பாளர், மேட்டுப்பாளையம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஈ.தங்கராஜ் ஏற்பாட்டில் மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்டோர் பாரதிய ஜனதா கட்சி மாவட்ட ஓபிசி செயலாளர் வெங்கமேடு சங்கர் தலைமையில் திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இதில் ஜோதி, சரவணகுமார், குழந்தைவேல், தயானந்தன், ஸ்ரீதர், செந்தில்குமார், குட்டிகுமார், மூர்த்தி, சண்முகசுந்தரம், செல்வராஜ், புலுபட்டி சேகர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.




பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் மேற்கு ஒன்றியம், நாரணமங்கலம் கிராமத்தில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம், ஆலத்தூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், தலைமைக் கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, கழக இளம் பேச்சாளர் காருண்யா நடராஜன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள். தூய்மைப் பணியாளர்கள் 100 பேருக்கு தலா 5 கிலோ அரிசி, வேஷ்டி,சேலை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.